# சாதியற்றவனின் அடையாளத் தேடல்

## (நந்தன் கதை நாடகம் - இந்திரா பார்த்தசாரதி)

**முனைவர் இரா.டயானா கிறிஸ்டி**

**உதவிப் பேராசிரியர் , தமிழ் உயராய்வு மையம் ,**

**பாத்திமா கல்லூரி , மதுரை – 18. dayanachristy23@gmail.com**

36

**ஆய்வுச் சுருக்கம்**

இந்திரா பார்த்தசாரதி எழுதிய ஔரங்கசீப் தமிழ்நாடு பரிசு பெற்ற நூல். ஔரங்கசீப் என்னும் நூலில் இரு நாடகங்கள் இடம் பெறுகின்றன. அவற்றில் ஒன்று நந்தன் கதை என்னும் நாடகம். இது நந்தன் கதை. நந்தனார் கதை அல்ல. "ஆர்" என்பது சிறப்பு விகுதி அன்று. சிலுவை, சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு சீரிய நந்தன், இந்த "ஆர்" என்ற சிறப்பு விகுதிக்காக ஆதிக்கவாதிகளின் கைத்தட்டல் பெறுவதற்காக நெருப்பில் எரிந்துபோன சோக கதையைச் சொல்லுகிறது. சாதியற்றவனான நந்நனின் போராட்டத்தை, அதன் நோக்கத்தை கூறுவது. அவனது சமுகப்போராட்டத் தேடல் மனித உரிமை மீறல்களில் இருந்து விடுதலை. ஒடுக்கப்படுவதில் இருந்தும் அடக்கப்படுவதில் இருந்தும் மீட்டெடுப்பு, அடையாளத் தேடல்.

**திறவுச் சொற்கள்**

1. தீண்டாமை – ஒரு மனிதனைத் தொடுவது பாவம் எனல்
2. இனக்கூட்டு – ஒருசமுகமாக, இன குழுக்களாக இணைந்திருத்தல்
3. பிரித்தாளும் சூழ்ச்சி – ஒரு குழுவாக வாழும் மக்களைப் பிரித்து தான் வாழ நினைப்பது.
4. தலித் – அடக்கப்படும் ஒடுக்கப்படும் மக்களை குறிக்கும் சொல்
5. அடையாளம் – ஒருமனிதனின் தனித்துவப்பண்பு, பழக்கவழக்கம்.
6. வர்ணக் கோட்பாடு – பிறப்பின் அடிப்படையில் சாதி இன வேறுபாடுகளைக் கூறுவது

**முன்னுரை**

ஆயிரம் ஆயிரம் காலமாக அடிமைப்பட்டு ஒடுக்கப்பட்ட சமூகம் தலித் சமூகம். தலித் மக்களின் மேம்பாட்டிற்காக பல்வேறு அறிஞர்களும் போராடி வந்துள்ளனர். அதன் வெளிப்பாடாக ஒரு சில விடுதலை நிலைகளை தலித் மக்கள் அடைந்துள்ளனர். எனினும் சாதிய சமூகத்தில் இன்னும் அடிமை நிலை தொடர்கதையாகத் தொடர்ந்து வருகிறது. இதனை எதிர்த்துப் போராடி மானுட நிலைக்குத் தன்னை உயர்த்திக் கொள்ள நினைக்கும் போது மானுட மாண்பு இழப்பு, சுயமரியாதை இழப்பு, அடையாளம் மறுப்பு, குடிசைகள் எரிப்பு எனும் நிலை. மேலும் அடக்கப்பட்டு ஒடுக்கப்படும் சூழ்நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். இச்சூழல்களை வெளிப்படுத்தும் இலக்கியங்கள் பல தோன்றி விடுதலை முழக்கம் செய்கின்றன. அவற்றுள் ஒன்று நாடகம் ஆகும். நாடகங்கள் பெரும்பாலும் சமுதாய உணர்வுகளைத் தட்டி எழுப்புவதாய் அமைகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்கதாய் விளக்குவது இந்திரா பார்த்தசாரதியின் நந்தன் கதை நாடகம். பார்ப்பன வருண பாகுபாட்டில் சாதியற்றவராய் அறியப்படுபவர்கள் தலித் மக்கள். சாதியற்றவனாகிய நந்தன் தனக்கும் தன் சமூகத்திற்கும் விடுதலை வேண்டி போராடும் போராட்டமே நாடகமாக அமைந்துள்ளது. **நந்தன் கதை** எனும் நாடகத்தில் சாதியற்றவனின் தேடல் வெளிப்படுத்தப்படுகிறது. இதனைக் குறித்து ஆசிரியர் கூறும்போது இது நந்தனார் கதை இல்லை. நந்தன் கதை என்று கூறுவார். அதாவது சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு

சீரிய நந்தன் “ஆர்” விகுதிக்காகப் பார்ப்பனர்களின் கைத்தட்டல் பெறுவதற்காகத் தன் அடையாளங்களை எரித்துக்கொண்ட சோகத்தைச் சொல்வது. பிறப்பின் அடிப்படையில் சாதிகள் புகுத்தப்பட்ட போது அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் பிரிவில் அடங்காதவனாகப் பஞ்சமன் சுட்டப்படுகிறான். அத்தகைய சாதியற்றவனின் தேடல் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

**மதமும் சாதியும்**

மனிதனை நல்வழிப்படுத்தி மக்களை ஒன்றுபடுத்த உருவான சமயம் பிற்காலத்தில் சாதியத்தின் நிலைப்பாட்டை, தீண்டாமையைக் கட்டிக் காக்கும் பெட்டகமாகத் திகழ ஆரம்பித்தது. சாதியத்தின் வேர் பிடிப்பதற்குச் சமூக நிறுவனமான சமயம் பெரும் உதவிகளை செய்கிறது. “சாதியம் மண்ணில் வேர்கொள்ள அதனைக் கட்டிகாக்கத் துணையாய் சமயம் எனும் நிறுவனம் நெகிழ்ந்து கொடுக்கிறது.” (முனைவர் உராசு இருபதாம் நூற்றாண்டு தமிழ் கிறித்தவ புதினங்களில் ஒடுக்கப்பட்டோர் பக்கம் 20) ஒடுக்கப்பட்பவன் கோவிலுக்குள் நுழைய முடியாத சூழல். மீறி நுழைந்தால் எதிர்ப்பு, எரிப்பு எனும் நிலை இன்னும் தொடர்கிறது. நந்தன் நாடகத்திலும் கோயிலில் நுழைய முடியாத தீண்டாமை நிலை சுட்டப்படுகிறது. “நந்தன் திருப்புன்கூர் கோயிலுக்குள் உள்ளார போய் சாமியை கும்பிடணும். இதுக்கு உங்களால உதவி செய்ய முடியுமா?. கோயிலுக்கு உள்ளார போகணும் என்கிறது தான் ஆசை. பறையன் சாமியை பார்க்கக்கூடாது. மறைச்சிகிட்டு இருக்குது மாடு. பறையனை விட ஒசத்தி மாடு அது கோயிலுக்கு உள்ளார போகலாம்.” (நந்தன் கதை நாடகம் பக்கம் 11) எனும் கூற்றிலிருந்து தீண்டாமை கோயிலுக்குள்ளும் உள்ளதை அறிய முடிகிறது. “சாதி என்பது வெறும் இனக்கூட்டு என்பது மட்டுமல்ல. இது மனித உறவில் உயர்வு – தாழ்வு, தூய்மை - தீட்டு என்றும் தீண்டத்தகாதவர் என மனிதரில் ஒரு பிரிவினரை “மனிதப் பிறவியே அல்ல” எனக் கூறியும், அதற்கு இறை முலாம் பூசி சமூக அதிகாரம் பெறுவதற்காகப் பிரித்தாளும் சூழ்ச்சியின்புறத் தோற்றமே!. சமுதாய அரசியல் கட்டுமான வடிவமே.” (செபமாலை இராசா, சாதி ஒழிப்பு ப. 29) என்பது இதனால் விளங்கும்.

“அழுக்கு சாமி வேணா அழகு சாமி வேணுமா பார்ப்பன சாமி வேணுமா” இந்தக் கூற்று தலித் மக்களுக்கான சாதி வேறு சாமி வேறு. மேல் தட்டு மக்களின் சாமி வேறு என்பதை உணர்த்துகிறது. வீரன், இருளன், காட்டேரி, சாமுண்டி, வெறியன், நல்லண்ணன், தொட்டிய சின்னான், பெத்தண்ணன் இவர்கள் பரசாமி என்று குறிப்பிடப்படுகிறது. இதுபோல் கோயிலில் தீண்டாமை உள்ளதையும் கோயிலுக்குள் மாடு போகலாம் மனிதன் போக முடியாத சூழலையும் இந்த நாடகம் வெளிப்படுத்துகிறது. “சாதிய ஏற்றத்தாழ்வை, தீண்டாமையை நியாயப்படுத்த கட்டிக்காக, நிலை நிறுத்த மனு தர்மங்கள் அதாவது சமுதாய நீதி நெறிகள் உருவாக்கப்பட்டன. ஆதிக்கம் செலுத்துபவன் தன் நலனுக்காகப் படைத்த மனுதர்மங்கள், சாத்திரங்கள் அடக்கும் அதிகார நீதி நெறிகளாகவே எழுதப்பட்டன, திணிக்கப்பட்டன. அவை சாதிய பிரிவுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் ஏற்றுக்கொள்ள நிர்பந்தித்ததோடு, மக்கள் தம் எதிர்ப்புகளை வெளிக்காட்ட விடாமல் அடங்கியே வாழவும் இவை கட்டாயப்படுத்தி, வெளிப்படுத்தாமல் அமைதியாக அடிமைத்தனத்தை ஏற்று வாழ்வதே சரியான வாழ்வாகும் என போதிக்கும் மதங்களும், அவற்றைக் கட்டிக் காத்து வரும்

அதிகாரமும் சாதிய நஞ்சை பாதுகாக்கும் பேழைகளாகவே இருந்து வருகின்றன" (ஜெபமாலை ராசா சாதி ஒழிப்பு பக்கம் 21) இத்தகைய சமய நடைமுறைகள் தீண்டாமையை வலியுறுத்துவதுடன் நிலைப்படுத்துவதாகவும் அமைகிறது. இன்றும் இந்நிலைத் தொடர்வது தான் அவமானம். சேலம் தலைவாசல் வட்டம் வடகு மறை கிராமம் காளஹஸ்தீஸ்வரர் வரதராஜ பெருமாள் கோயிலில் தலித் மக்கள் நுழைய முடியாத தீண்டாமை தொடர்கிறது.கே.ஆர் நாராயணன் கோயில் நுழைவு மறுப்பு இதுபோல் சொல்லிக் கொண்டே போகலாம். அத்தகைய தீண்டாமை இன்றும் தொடர்ந்து வருகிறது. கடவுள் நம்பிக்கை மனிதனை மனித விடுதலையை விதைக்காமல் இத்தகைய அடிமைத்தன சூழலை விதைக்கும் நிலையை இந்நாடகம் நமக்கு வெளிப்படுத்துகிறது.

**மக்கள் பண்பாடு புறக்கணிப்பு**

நந்தன் தன்னை உயர்த்திக்கொள்ள எண்ணும்போது தன் பண்பாட்டை இழிவுபடுத்தும் போக்கினை இந்நாடகம் வெளிப்படுத்துகின்றது. சமுதாய அடிமைத்தனத்தின் ஒரு கூறு அடையாள இழப்பு. அதனை சாமர்த்தியமாக ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். "ஆடு மாடு தின்னும் புலையன் பறசாமி வேணாம் பாப்பார சாமி வேணும் அழுக்கு சாமி வேணாம் அழகு சாமி வேணும் காட்டு சாமிக்கு பதில் நாட்டு சாமி வேணும்" (ந.க.நா.ப – 105) எனும் கூற்றில் தலித் பண்பாட்டை வெறுக்கத்தக்கதாகக் காட்டி இருப்பதும் இன்றைய தலித் அடிமைத்தன சூழலுக்கான காரணத்தையும் சுட்டுவதாக அமைகிறது. "பிடிப்பது நண்டு. புசிப்பது இறைச்சி. குடிப்பது கள்ளு. கையிலே கலயம். காலிலே சேறு. பையிலே பாக்கு. விதைத்தெளித்து, நாத்து பறித்து, நடவு நட்டு, மடைதிறந்து மடை கோழி, கலை பிடுங்கி காப்போம்" (ந.க.நா.ப – 110) இவ்வாறு கூறும் மக்களை நந்தன் கோபத்துடன் "நிறுத்துங்கடா ஆட்டம். நம்மை நாம மாத்திக்கிட்டா போதும். பாப்பார கோயிலுக்குள் போகலாம். மனுசங்க நாம மாடுகளா இருக்கோம். மனுஷங்களா மாறனும். பறச்சிகிற நினைப்பு வேணாம்." (ந.க.நா.ப – 112) என்று தன்னிலை மறக்க, தன் வாழ்வியலைத் தாழ்த்திக் கூறுவதும், மேல்நிலைப்யடைய தூய்மை கோட்பாடும் வலியுறுத்தப்படுகிறது. மேல் தட்டு மக்களின் வாழ்வியல் உயர்ந்தது எனும் நம்பிக்கையை விதைப்பதாக இக்கூற்று அமைகிறது. தலித் மக்களின் வாழ்வியலையே கேள்விக்கு உள்ளாக்கும் சூழல் இக்கூற்றில் விளக்கப்படுகிறது "பார்ப்பனிய வல்லாதிக்கம் தமிழை, தமிழ் மண்ணை, தமிழ் மக்களை, தமிழ் கலாச்சாரத்தை, நாசப்படுத்தி வந்திருக்கிறது. தமிழர்களும் தங்களின் கலாச்சார பாரம்பரியங்களை முற்போக்கான மரபுச் செழுமைகளை இழந்து தன் அடையாளம் இன்றி வாழ்ந்து வருகின்றனர்" (பிரிட்டோ.பீட்ர்.சிங்.வேர்களைத்தேடி பக் 124) "மேல்நிலை ஆக்க இயக்கங்கள் பலவும் உயர்சாதி பண்பாட்டின் குறியீடுகளாக விளங்கும் பழக்க வழக்கங்களை மேற்கொள்வதை தம்முடைய இயற்கை கொள்கையாகக் கொண்டிருப்பதுண்டு. இது மறைமுகமாக அம்மக்களின் சொந்த பண்பாட்டை இழிந்ததாக கொள்வதாகவும் அமைவதுண்டு" (மா உத்திராபதி காலம் தோறும் நந்தன் கதை ப - 57). பூணுலும் வேதபாராயணமும் விடுதலைக்கான சின்னங்கள் அல்ல. அவை மரபுவழிப்பட்ட ஒடுக்குமுறையின் சின்னங்கள் என்பதை நந்தன் உணராத நிலை சுட்டப்படுகிறது. இன்றும் இதுபோன்ற நம்பிக்கையியில் உள்ள மக்களைச் சுட்டிக்காட்டுவதாக அமைகின்றது. "இதுபோல் அமெரிக்க ஆப்பிரிக்கா மக்கள் தம் விடுதலைக்காகப் போராடும்போது அவர்கள் தங்கள் மொழியை இழந்தனர். தங்கள் மதங்களை இழந்தனர். தங்களை தாங்களே வெறுப்புடன் கண்டனர். வெள்ளைக்காரர்களைப் போல தங்களை பண்பாட்டளவில் மட்டுமல்லாமல் உடலமைப்பிலும் ஆக்கிக்

கொள்ள முயன்றனர். அடிமைமுறை ஒழிப்பு அவர்களை இந்த துல்லியமான தாங்களே தங்கள் மீது சுமத்தி கொண்ட பண்பாட்டு அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கவில்லை. இந்த வரலாற்றுப் பண்பாட்டு வகை உண்மைகளை நினைவில் கொண்டால் மட்டுமே கருப்பு அழகு என்றும் நாம் கருப்பர்கள் அழகியவர்கள் என்றும் ஸ்டோக்லி கார் மைக்கேல் முழக்கங்களில் அடங்கியுள்ள சக்தியை இன விடுதலைக்கு வழி கூறும் சக்தியை புரிந்து கொள்ள முடியும்." (மா உத்திராபதி காலந்தோறும் நந்தன் கதை ப.59) அவர்களைப்போல் தலித் மக்களும் தங்கள் நிலையை உணர்தல் வேண்டும் என்பது போல் நாடகம் அமைக்கப்பட்டுள்ளது.

**ஆட்சியும் அதிகாரமும்**

இன்றைய சூழலில் அடக்குமுறைகளை எதிர்க்க ஆட்சியும் அதிகாரமும் தேவையாகிறது. அதிகாரம் யாரிடம் இருக்கின்றதோ அவர்கள் தங்கள் கருத்துக்களை வலியுறுத்தவும் நிலை நாட்டவும் முடியும். சாதியும் மதமும் பண்பாட்டுத் தளங்களில் மட்டும் இன்றி அரசியலிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன. ஆட்சி அதிகாரம் ஒரு சிலரிடம் மட்டுமே இருக்கின்றது. உழைக்கும் மக்களுக்கு அது எட்டாக்கனியாகவே உள்ளது. இந்நிலையை நந்தனின் கதை நாடகம் வெளிப்படுத்துகிறது. "ஆடு தின்னும் புலையன் அவனுக்கு ஆனி தரிசனமா? முளையிலே கிள்ளி எறியனும் முத்த விட்டா போச்சு! பறையன் மனுஷனுக்கு மனுஷன் அடிமை பண்ணைக்காரன் வச்ச சட்டம் என்கிறான் நந்தன். நாக்கு நீண்டா பறையனுக்கு வரும் நாட்டாமை புலையன் ஆள்கிற நாட்டிலே புல்லு புடுங்குறது யாரு? ஒத்துமை நமக்கு வேண்டாம். சாதி தர்மம் போனால் நாதியத்து போவோம்" (ந.க.நா.ப – 105) என்னும் கூற்றில் பேச விட்டா சமத்துவம் தேடுவான். அதிகாரம் பெறுவான். அவனுக்குக் கீழ வாழ்வது எப்படி? என்று மேல் தட்டு மக்களுடன் பார்ப்பானும் போராடும் நிலை காணப்படுகிறது. ஒற்றுமை வந்தால் சமத்துவம் பேசி சமநிலை பெறுவான் தலித். ஒடுக்கப்பட்டவன் அரசாண்டால் புல்லு புடுங்கும் வேலையை யார் செய்வது எனும் கூற்று ஆட்சி அதிகாரம் ஒருதலித் பெருவதை விரும்பாத மனநிலையைக் காட்டுகிறது. உழைக்கும் மக்கள் உழைக்கமட்டுமே! சாதி பாகுபாடு அதனைக் கட்டிக்காக்கும் என்பதும் தெளிவாகிறது. "ஸ்தாபனத்தை ஒருவன் எதிர்த்துப் போராடினா ஸ்தாபனம் அவனை ஏத்துக்கட்டும். எதிர்க்கிறவன் கட்சி இரண்டாகும். ஸ்தாபனம் வாங்கி விட்ட கைக்கூலின்னு அவன் தலைமையை எதிர்த்துப் போராட புதுசா ஆட்கள் புறப்படுவா. இதுதான் இப்போ நடக்கிறது. இன்னும் சில காலம் காத்திருங்கோ நந்தன் கதையும் முடிஞ்சாச்சு." (ந.க.நா.ப - 121) அதிகாரத்திற்கு வராமல் அடிமைத்தனத்தை எதிர்த்ததற்கே ஆளை முடிக்கும் நிலையும் நாடகம் வழி வெளிப்படுத்தப்படுகிறது. இன்று மட்டும் விதிவிலக்காகவா நடக்கிறது. இன்னும் ஆணவக் கொலைகள், உடைமைகள் எரிப்பு, நிராதரவற்ற நிலையை உருவாக்குதல் போன்றவை அரங்கேறிய வண்ணமே உள்ளது.

**பிரித்தாளும் சூழ்ச்சி**

ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வை விரும்பாத மேட்டுக்குடி மக்கள் அவர்களுக்குள்ளேயே பிரச்சனைகளைத் தூண்டி விடுகின்றனர். இதை சூழ்ச்சியாக செய்து வருகின்றனர். எந்தவிதமான பிரிவினையை கொண்டு வருவதானாலும் சூழ்ச்சியை கையாள்வது அரசியல் உத்தி. இங்கும் ஒடுக்கப்பட்ட மக்கள் சமத்துவ நிலையை அடைய போராடுகின்றனர். தன் இன மக்களை மேன்மை அடைய செய்யும் நோக்கில் நந்தன் மக்களை ஒன்று திரட்டுகிறான். அதனை விரும்பாத மேட்டுக்குடி மக்கள் அவர்களிடையே பிரிவினையை ஏற்படுத்த நினைக்கின்றனர். நந்தன் சாதியில் மேலும் பிளவு உண்டாக வேதியர் முதலானோர் பரதநாட்டியத்திற்கும் பறையர் பள்ளு கூத்துக்கும் ஒரு போட்டியை ஏற்பாடு செய்து நடத்துகிறார்கள். பரதம் வெற்றி பெற்றதாக அறிவிப்பதுடன் அவர்களுக்குள்ளேயே

பிரிவினையை ஏற்படுத்துகின்றனர்.

நந்தனால் தங்களுடைய நோய் நொடிகள் நீங்கியதாக வேதியரால் ஏவி விடப்பட்ட ஆட்கள் நந்தனை வணங்குகின்றனர். நந்தன் தனக்கு உண்மையாகவே இறையருள் கிடைத்து விட்டதாக நம்புகிறான். சேரியில் பகைமையும் பொறாமையும் அதிகரிக்கிறது. நந்தனுடைய வழியிலேயே சென்று அவனுடைய ஆசைகள் பலிக்கும்படியாக உதவி செய்து, அதே சமயம் அவனுக்கு இறையருள் கிட்டியதால் இவ்வாறு எல்லாம் செய்கின்றான். என்று அவனை நம்பச் செய்து, அவனை தன் மயக்க நிலையில் ஆழ்த்தி தனக்கு தெய்வீக சக்தி இருப்பதாக நினைக்கும் படி செய்வது. அதே சமயம் அவனை அவனுடைய வகுப்பினரிடம் இருந்து அன்னியப்படுத்தி அவன் வகுப்பினருக்குள்ளேயே பகைமையை வளர்த்து அவனை தனிமைப்படுத்துவது. இறுதியில் நந்தனை தீயிலிருந்து அவன் பக்தி அவனைக் காக்கும் என்று நம்ப வைத்து தீக்குளிக்க செய்து எரிப்பது இவையே வேதியரின் சூழ்ச்சியாக அமைகிறது. அதற்கு மதமே ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது. அதிகாரம், அரசியல் பதவி, பட்டங்கள் மனிதனை அடிமைத்தளையிலிருந்து விடுவிக்கும். அத்தகைய வாழ்வை அடைய தடைசெய்யும் தந்திரப் புத்தியும் இங்கு விளக்கப்படுகிறது. இன்றும் மனித விடுதலைக்கு, சமத்துவத்துக்குக் குரல் கொடுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தைத் திருத்துதல் என்ற பெயரில் ஆதிக்கவர்க்கத்திற்கு ஏற்றமாதிரியான திருத்தங்களை மேற்கொண்டு ஒடுக்கப்பட்ட மக்கள் மேலெம்ப முடியாத சூழலை உருவாக்குகிற்றனர் என்பது உலகறிந்தது.

**முடிவுரை**

வருண சமுதாய உறவு முறை சமயத்துடன் பிணைக்கப்பட்டிருக்கிறது. சமயம் தீண்டாமை, தீட்டு என்ற கொள்கைகளை மக்களிடையே பரப்பி மக்களுக்கு இடையே வேறுபாடுகளை ஏற்படுத்துகிறது. வர்ண முறை என்பது சூழலுக்கு ஏற்ப மாறி வரும் தன்மை கொண்டது. வருண பாகுபாட்டில் இருந்து வெளிப்பட்ட சாதி வேறுபாடுகளே இன்றைக்குத் தீராத பிரச்சனையாக உள்ளது. இந்திய மக்களின் ஒற்றுமைக்கு இது சவாலாக உள்ளது. மக்களாட்சி காலத்திலும் வர்ணக் கோட்பாடும் சாதி முறைகளும் தொடர்வது வேதனையில் உச்சக்கட்டம்.

ஒரு சமூகத்தின் முன்னேற்றம் சமூக அந்தஸ்தும் அரசியல் அதிகாரமும் பொருளாதார வளமும் அரசியல் பலத்தைப் பொறுத்தே அமைகிறது அந்தப் பங்கேற்பும் ஒடுக்கப்படும் மக்களுக்கு மறுக்கப்படுகிறது. முழுமையாக இன்னும் கிடைக்கவில்லை.

சாதியற்றவனின் தேடல் அதிகார ஆணவம் இல்லை. அடிப்படை மனித உரிமைகள். மனித உரிமை மீறல்களில் இருந்து விடுதலை. சமத்துவ சகோதரத்துவம் சக மனிதனாகப் பார்க்க அழைப்பு. ஒடுக்கப்படுவதில் இருந்து விடுதலை. அடக்கப்படுவதில் இருந்து மீட்டெடுப்பு. அடையாள இழப்புக்களிலிருந்து அடையாளத் தேடல். இத்தகைய தேடலை நிறைவு செய்யாத சமூகம் சமூக நீதியற்றச் சமூகமே என்பது உண்மை.

**பார்வை நூல்கள்**

1. இந்திரா பாத்த்தசாரதி, ஔரங்கசீப், நந்தன் கதை இருநாடகங்கள்.
2. முனைவர் உ.ராசு, இருபதாம் நூற்றாண்டு தமிழ் கிறித்தவ புதினங்களில் ஒடுக்கப்பட்டோர்.
3. மா உத்திராபதி, காலந்தோறும் நந்தன் கதை.
4. ஜெபமாலை ராசா, சாதி ஒழிப்பு.
5. பிரிட்டோ.பீட்ர்.சிங்,வேர்களைத்தேடி .